# EVM BROCHURE FOR ELECTORS




**OCTOBER, 2023**

# ELECTION COMMISSION OF INDIA




Control Unit (CU) VVPAT Ballot Unit (BU)

**Electronic Voting Machine (EVM)**: An EVM consists of two units, namely, Control Unit (CU) and Ballot Unit (BU) with a cable (5mt.long). A Ballot Unit caters upto16 candidates. 24 (Twenty-four) Ballot Units can be cascaded together for catering to 384 candidates (including NOTA) which can be used with one Control Unit. On the right side of the BU along the candidates' vote button, digits 1 to 16 are embossed in Braille signage for guidance of visually impaired electors. It runs on a power pack (Battery) having 7.5 volts.

**Voter Verifiable Paper Audit Trail (VVPAT)**: Voter Verifiable Paper Audit Trail is an independent system attached with the Electronic Voting Machines that allows the voters to verify that their votes are cast as intended. VVPAT runs on a power pack (Battery) of 22.5 volts.


**Functioning of EVM and VVPAT**:

- Control Unit is kept with the Presiding Officer/Polling Officer and Ballot Unit and VVPAT are kept in the Voting Compartment.
- When a vote is cast on Ballot Unit by pressing candidate button (Blue Button) of his/her choice, **RED** light is glow against that particular candidate button.
- On other hand, a slip is printed on the VVPAT printer containing the serial number, name and symbol of the candidate and remains exposed through a transparent window for about 7 seconds.
- Thereafter, this printed slip automatically gets cut and falls in sealed drop-box of the VVPAT.
- Thereafter, a beep sound is heard from the Control Unit to ensure vote has been registered successfully.

| Technical Security Features | | |
|---|---|---|
| **Features** | **Purpose** | **Ruled Out** |
| Standalone | EVM used by the Commission is a stand-alone non-networked machine which can be connected to EVM components only (e.g. CU, BU, VVPAT, SLU, P-FLCU). | Any connection with external world through wire or wireless |
| One Time Programmable (OTP) Chip | The machine is electronically protected to prevent any tampering/manipulation. The programme (software) used in these machines is burnt into a One Time Programmable (OTP) chip so that it cannot be altered or tampered with. | Any alteration or tampering |
| Unauthorized Access Detection Module (UADM) | Software as well as polled data is stored in the micro-controller of the Control Unit of EVM, which is protected by a Secure Module. Any attempt to open the Secure Module at any time whether the machine is on or off, renders the machine in factory mode and the machine becomes inoperative. | Any access to microcontroller or memory |
| No Radio Frequency Transmission or Reception Capability | Any tampering of ECI-EVM by coded signals by wireless, Bluetooth or WiFi is ruled out as EVM does not have any radio frequency (RF) communication capability, hence, cannot communicate through Wifi, Bluetooth etc. | Any tampering by coded signals by wireless like Bluetooth or Wifi |
| Dynamic Coding of Key Presses | Every key press is coded dynamically making it impossible for anyone to decode the signals between Control Unit and Ballot Unit. | Any decoding of the signal between Control Unit, Ballot Unit and VVPAT |
| Most Advanced Encryption Techniques | Standards used are proven to work effectively in modern systems | Any deciphering by tapping cables |
| Strong Mutual Authentication Capability | The strong mutual authentication capability ensures that any unauthorized devices cannot interact with EVMs | Any interaction with any unauthorized devices |
| Real Time Clock for date and time stamping key presses | Every authorised or un-authorised key press is recorded with date and time stamp on real time basis. | Any malpractice |

| S. No. | Various activities related to EVMs/VVPATs with the involvement of the representatives of National & State Recognised Political Parties and Candidates |
|---|---|
| 1. | **Opening and Closing of EVM warehouse** |
| | • During non-election period till finalization of list of the contesting candidates, EVM-VVPAT warehouses are opened/closed (for any purpose like movement, inspection etc.) in the presence of the representatives of National and State Recognised Political Parties.<br>• With finalization of list of the contesting candidates, candidates and their representatives are involved while opening and closing of EVM-VVPAT warehouses/strong room.<br>• Opening and Closing of EVM warehouse/strong room is done under videography. |
| 2 | **First Level Checking of EVMs and VVPATs** |
| | • First Level Checking of EVMs and VVPATs is conducted before every election by the authorised engineers of Bharat Electronics Limited (BEL) and Electronics Corporation of India Limited (ECIL) at DEO level.<br>• For this purpose, National and State Recognised Political Parties at district headquarters are invited in writing by DEO concerned at least two days before the beginning of FLC and a copy is endorsed to state headquarters.<br>• The representatives of National and State Recognised Political Parties are involved to oversee entire FLC process.<br>• Higher mock poll is conducted in 5% randomly selected EVMs and VVPATs (i.e. 1200 votes in 1% EVMs, 1000 votes in 2% EVMs and 500 votes in 2% EVMs). The electronic result of EVM is tallied with the VVPAT slips count. They are allowed to pick 5% EVMs and VVPATs randomly and also to do mock poll.<br>• List of FLC ok EVMs and VVPATs is shared with all National and State Recognised Political Parties.<br>• The representatives of National and State Recognised Political Parties are allowed to sign the seals, forms register during FLC. |
| 3 | **Taking out of EVMs and VVPATs for Training and Awareness after FLC** |
| | • After completion of FLC, maximum up to 10% EVMs and VVPATs are taken out for awareness and training purpose in the presence of National and State Recognised Political Parties.<br>• The list of awareness and training EVMs and VVPATs is shared with them. |
| 4 | **Randomizations of EVMs and VVPATs** |
| | • First randomization of EVMs and VVPATs is conducted in the presence of National and State Recognised Political Parties to allocate EVMs and VVPATs Assembly constituency/ segment-wise.<br>• List of first randomized EVMs and VVPATs (AC/AS-wise) is shared with National and State Recognised Political Parties.<br>• After finalization of list of contesting candidate, list of first randomized EVMs and VVPATs (AC/AS-wise) is also shared with contesting candidate. |

| | |
|---|---|
| | • Second randomization of EVMs and VVPATs is conducted, before commissioning of EVMs and VVPATs, in the presence of contesting candidates to allocate polling station wise and reserve machines.<br>• The list of second randomized EVMs and VVPATs is shared with contesting candidates. |
| 5 | **Commissioning of EVMs and VVPATs** |
| | • Commissioning of EVMs and VVPATs for use in poll is done in the presence of contesting candidates. |
| | • Candidates/their representatives are allowed to sign the seals used in sealing EVMs and VVPATs. |
| | • Higher mock poll is conducted in 5% randomly selected EVMs and VVPATs by casting 1000 votes. The electronic result of EVM is tallied with the VVPAT slips count. Candidates/their representatives are allowed to pick 5% EVMs and VVPATs randomly and also to do mock poll. |
| 6 | **Dispersal of EVMs and VVPATs with Polling Parties** |
| | • Dispersal of EVMs and VVPATs are done in the presence of the contesting candidates. |
| 7 | **Mock Poll and Actual Poll on Poll Day** |
| | • Mock Poll on Poll day is conducted at every polling station in the presence of the polling agents nominated by the contesting candidates. |
| | • Polling agents nominated by the contesting candidates are allowed to remain in polling stations to observe polling process. |
| | • Polling agents are allowed to sign the seals used in sealing EVMs and VVPATs (before commencement of poll and close of poll). |
| 8 | **Transportation of polled EVMs and VVPATs from Polling Stations to Collection Centre** |
| | • Candidates/Polling agents are allowed to follow vehicles carrying polled EVMs and VVPATs from polling station to collection centre. |
| 9 | **Storage of Polled EVMs and VVPATs** |
| | • Polled EVMs and VVPATs are stored in the strong room in the presence of Candidates/their representatives.<br>• Candidates/their representatives are also allowed to put their seals on the locks of the strong room.<br>• Candidates/their representatives are also allowed to monitor storage and security of polled EVMs and VVPATs. |
| 10 | **Counting Day** |
| | • Polled Strong Room is opened in the presence of Candidates/their representatives, Returning Officer, ECI Observer on counting days. |
| | • Counting of votes is done in the presence of candidates and counting agents appointed by them. |


HOW TO CAST YOUR VOTE
USING EVM & VVPAT
1
ENTER THE BOOTH
The Presiding Officer will enable the ballot Unit while you enter the polling compartment.
Ready
2
CAST YOUR VOTE
Press the Blue Button on the Ballot Unit against the name /symbol of candidate of your choice.
3
SEE THE LIGHT
The red light against the name/symbol of candidate chosen will glow
4
SEE THE PRINT
VVPAT
The Printer will print a ballot slip containing Serial Numer, Name and Symbol of the chosen Candidate as shown.
See the print through the glass, as the printout will not be given to you
The slip will be visible for 7 seconds
NOTE!
If you do not see the ballot slip and hear the loud beep please contact the Presiding officer.
ELECTION COMMISSION OF INDIA
URL : https://eci.nic.in

# வாக்காளர்களுக்கானமின்னணுவாக்குப்பதிவுககருவிகுறித்தகையேடு




**அக்டோபர் 2023**

**இந்திய தேர்தல் ஆணையம்**



**கட்டுப்பாட்டு அலகு வாக்காளர் தாம் அளித்த வாக்குப்பதிவுக் கருவி**
**வாக்கினை சரிபார்க்கும் கருவி**

**<u>மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM):</u>** ஒரு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம், கட்டுப்பாட்டுக் கருவி (CU) மற்றும் கம்பி வடத்துடன்(5மீ.நீளம்) கூடிய வாக்குப்பதிவுக் கருவி (BU) ஆகிய இரண்டு அலகுகளைக் கொண்டுள்ளது, ஒரு வாக்குப்பதிவு இயந்திரம் 16 வேட்பாளர்களைக் கொண்டிருக்கும். ஒரு கட்டுப்பாட்டுக் கருவியுடன் 384 வேட்பாளர்களைப் பதிவு செய்யும் வகையில் (நோட்டா உட்பட) 24 (இருபத்தி நான்கு) வாக்குப்பதிவுக் கருவிகளை இணைத்து பயன்படுத்த முடியும். பார்வைத்திறன் குறைபாடுள்ள வாக்காளர்களுக்கான வழிகாட்டுதலுக்காக, வேட்பாளர்களின் வாக்களிக்கும் பொத்தானுடன் வாக்குப்பதிவுக் கருவியின் வலது பக்கத்தில், 1 முதல் 16 வரையிலான இலக்கங்கள் பிரெய்லி முறையில் பொறிக்கப்பட்டுள்ளன. இது 7.5 மின்னழுத்த வோல்ட் திறன் கொண்ட மின்கலத்தில் (பேட்டரி) இயங்குகிறது.

**<u>வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவி (VVPAT):</u>** வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவி என்பது மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுடன் இணைக்கப்பட்ட ஒரு தனிப்பட்ட அமைப்பாகும். இது வாக்காளர்கள் தங்களால்

அளிக்கப்பட்ட வாக்குகள் பதிவாகியுள்ளது என்பதைச் சரிபார்க்க உதவும் அமைப்பாகும். வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவி (VVPAT) 22.5 மின்னழுத்த வோல்ட் திறன் கொண்ட மின்கலத்தால் (பேட்டரி) இயங்குகிறது.

**<u>மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவியின் (VVPAT) செயல்பாடு:</u>**

- கட்டுப்பாட்டு அலகு கருவியானது வாக்குச்சாவடி தலைமை அலுவலர்/வாக்குப்பதிவு அலுவலரிடமும் வாக்குப்பதிவுக் கருவி மற்றும் வாக்காளர் தான் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவி ஆகியவை வாக்களிக்கும் பகுதியிலும் வைக்கப்பட்டிருக்கும்.
- வாக்காளர்கள் தங்களுடைய விருப்பப்படி, வேட்பாளர் பொத்தானை (நீல பொத்தான்) அழுத்தி வாக்குப்பதிவு கருவியில் வாக்கினை அளிக்கலாம்.
- மேலும், வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவியின் அச்சுப்பொறியில் (printer) வேட்பாளரின் வரிசை எண், பெயர் மற்றும் சின்னம் ஆகியவை அச்சிடப்பட்ட ஒரு சீட்டு, அதன் கண்ணாடிப் பகுதி வழியாக காணும் வகையில் சுமார் 7 வினாடிகளுக்கு காட்டப்படும்.
- அதன்பிறகு, இந்த அச்சிடப்பட்ட சீட்டு தானாகவே வெட்டப்பட்டு வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவியின் முத்திரையிடப்பட்ட பெட்டியில் விழும்.
- அதன்பிறகு, வாக்குப்பதிவு வெற்றிகரமாகப் பதிவு செய்யப்பட்டதை உறுதிசெய்ய கட்டுப்பாட்டுக் கருவியிலிருந்து "பீப்" என்ற ஒலி கேட்கும்.

| **தொழில்நுட்ப பாதுகாப்பு அம்சங்கள்** | | |
|---|---|---|
| **அம்சங்கள் / கூறுகள்** | **நோக்கம்** | **தகுதியற்றதென விலக்கப்பட்டது** |
| தன்னிச்சையான கருவி | தேர்தல் ஆணையத்தால் பயன்படுத்தப்படும் மின்னணு வாக்குப்பதிவுக் கருவி என்பது | கம்பிவட அல்லது கம்பிவடமல்லா இணைப்பினால் வெளி |

| | | |
|---|---|---|
| | வலையமைப்பற்ற தனித்த இயந்திரமாகும், இது மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்துடனான கருவிகளுடன் மட்டுமே இணைக்கப்படும் (எ.கா. கட்டுப்பாட்டுக்கருவி(CU), வாக்குப்பதிவுக் கருவி (BU), வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவி(VVPAT), தேர்தல் சின்னத்தை பதிவேற்றும் அலகு(SLU), P–FLCU). | வட்டாரத்துடனான ஏதேனும் தொடர்பு |
| ஒரு முறை நிரலாக்கம் செய்யக் கூடிய (OTP) செறிவட்டை(chip) | இயந்திரத்தை எந்தவொரு சேதத்திலிருந்தும் / கையாளுதலிலிருந்தும் தவிர்க்க, மின்னணு முறையில் பாதுகாக்கப்படுகிறது. இந்த இயந்திரங்களில் பயன்படுத்தப்படும் நிரல் (software) ஒரு முறை நிரலாக்கக்கூடிய (OTP) செறிவட்டையில் நிறுவப்படுவதால், அதை மாற்றவோ அல்லது சேதப்படுத்தவோ முடியாது. | ஏதேனும் மாற்றம் செய்தல் அல்லது (தரவுகளை) அழித்தல் |
| அங்கீகரிக்கப்படாத அணுகல் கண்டறிதலுக்கான தொகுதி (UADM) | மென்பொருள் மற்றும் வாக்களிக்கப்பட்ட தரவுகள் மின்னணு வாக்குப்பதிவுக் கருவியுடனான கட்டுப்பாட்டுக் | நுண் கட்டுப்பாட்டுக் கருவி (மைக்ரோ கண்ட்ரோலர்) அல்லது நினைவகத்திற்கான ஏதேனும் அணுகல் |

| | | |
|---|---|---|
| | கருவியின் நுண் கட்டுப்பாட்டுக் கருவியில் (மைக்ரோ–கன்ட்ரோலரில்) சேமிக்கப்படும். இது பாதுகாப்புத் தொகுதியால் பாதுகாக்கப்படுகிறது. இயந்திரம் செயல்படும் நிலையில்(on) அல்லது அணைக்கப்பட்ட நிலையில்(off) இருந்தாலும், எந்நேரத்திலும், பாதுகாப்புத் தொகுதியைத் திறக்கும் முயற்சி ஏதேனுமிருப்பின், இயந்திரம் factory நிலைக்குச் சென்று செயல்பாடு ஏதுமற்ற நிலையை அடைந்துவிடும். | |
| ரேடியோ அலைவரிசை பரிமாற்றமின்மை அல்லது ஏற்புத்திறனின்மை | மின்னணு வாக்குப்பதிவுக் கருவிக்கு ரேடியோ அலைவரிசை (RF) இணைப்புத் திறனின்மையால், கம்பிவட இணைப்பற்ற (wireless), தரவி/ ஊடலை (blueooth) அல்லது கம்பியில்லா அதிவேக இணைப்பின்(Wi–Fi ) குறியீட்டு சமிக்ஞைகளால் இந்திய தேர்தல் ஆணையத்தின் மின்னணு வாக்குப்பதிவுக் கருவியை சேதப்படுத்துவது சாத்தியமில்லை. எனவே, தரவி/ஊடலை | தரவி / ஊடலை (bluetooth) அல்லது கம்பியில்லா அதிவேக இணைப்பினால் (Wi–Fi ) குறியிடப்பட்ட சமிக்ஞைகள் வாயிலாக ஏதேனும் சேதம் ஏற்படுத்தல் |

| | | |
|---|---|---|
| | (bluetooth) அல்லது கம்பியில்லா அதிவேக இணைப்பினால் (Wi–Fi ) இக்கருவியுடன் தொடர்பு ஏற்படுத்த இயலாது. | |
| பொத்தான்கள் அழுத்தப்படுவதற்கான திறன்மிகு குறியீட்டு முறை | கட்டுப்பாட்டுக்கருவி மற்றும் வாக்குப் பதிவுக் கருவிக்கு இடையே உள்ள சமிக்ஞைகளை எவராலும் மாற்றியமைக்க இயலாதவாறு, அழுத்தப்படும் ஒவ்வொரு விசையும் நிரலாக்கப்பட்டிருக்கும். | கட்டுப்பாட்டுக் கருவி, வாக்குப்பதிவுக்கருவி மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவி ஆகியவற்றிற்கிடையேயான சமிக்ஞை குறித்த ஏதேனும் குறியீடு விலக்கம்(மறைகுறியாக்கம்) (decode) |
| மிக–மேம்பட்ட குறியாக்க நுட்பங்கள் | பயன்படுத்தப்படும் தரநிலைகள் நவீன அமைப்புகளில் திறம்பட செயல்படுவது நிரூபிக்க / மெய்ப்பிக்கப்பட்டுள்ளன. | கம்பி வடங்களைத் தட்டுவதால் புரிந்து கொள்வதற்கான ஏதேனும் முயற்சி |
| திறன்மிகு பரஸ்பர / உடன்பாட்டு அங்கீகரிக்கும் திறன் | மின்னணு வாக்குப்பதிவுக் கருவியுடன் அங்கீகரிக்கப்படாத சாதனங்கள் கலை தொடர்பு கொள்ள இயலாது என்பதை திறன்மிக்கவாறான ஒன்றோடொன்று அங்கீகரிக்கும் திறன் உறுதி செய்கிறது. | அங்கீகரிக்கப்படாத கருவிகளுடனான யாதொரு தொடர்பு |
| நாள் மற்றும் நேர பதிவிற்கான விசை | ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்படாத, விசை அழுத்தப்படும் நாள் மற்றும் | ஏதேனும் முறைகேடு |

| | | |
|---|---|---|
| அழுத்த நிகழ் நேர கடிகாரம் | நேரம் நிகழ்நேர அடிப்படையில் பதிவு செய்யப்படுகிறது. | |

| | |
|---|---|
| வரிசை எண் | அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசின் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் வேட்பாளர்களின் பங்களிப்புடன் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள்/ வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகள் தொடர்பான பல்வேறு செயல்பாடுகள். |
| 1 | மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் சேமிப்புக் கிடங்கைத் திறத்தல் மற்றும் மூடுதல் . |
| | • தேர்தல் நடைபெறாத காலங்களில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை இறுதி செய்யும் வரையில், அங்கீகாரம்பெற்ற தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள்/ வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளின் சேமிப்புக் கிடங்கு (எடுத்துச்செல்லுதல் , ஆய்வு போன்ற எந்தவொரு நோக்கத்திற்காக) திறக்கப்படும்/ மூடப்படும்.<br>• போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை இறுதி செய்தவுடன், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள்/ வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகள் வைக்கப்பட்டிருக்கும் கிடங்குகள்/ காப்பு அறையைத் திறக்கும் போதும் மூடும் போதும், வேட்பாளர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகள் உடனிருப்பர்.<br>• மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் கிடங்குகள்/காப்பு அறையைத் திறக்கும் போது ம் மூடும் போதும் காணொலிப் பதிவு செய்யப்படுகிறது. |
| 2 | **மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள்/ வாக்காளர் தாம் அளித்த வாக்கினைச் சரிபார்க்கும் கருவிகளின் முதல் நிலை சரிபார்ப்பு .** |
| | • மாவட்ட தேர்தல் அலுவலர் நிலையில் பாரத் மின்னனுவியல் நிறுவனம் (BEL) மற்றும் இந்திய மின்னணு கழக நிறுவனங்களின் (ECIL) ஆகிய நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட பொறியாளர்களால் ஒவ்வொரு |

தேர்தலுக்கு முன்பும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள்/ வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளின் முதல் நிலை சரிபார்ப்பு மேற்கொள்ளப்படுகிறது.

- இந்த நோக்கத்திற்காக, முதல் நிலை சரிபார்ப்பு தொடங்குவதற்கு குறைந்தது இரண்டு நாட்களுக்கு முன்னதாக, மாவட்ட தலைமையகத்தில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளுக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட தேர்தல் அலுவலரால் எழுத்துப்பூர்வமாக அழைக்கப்படுவதுடன் அதன் நகல் மாநில தலைமையகத்திற்கு அனுப்பப்படுகிறது .
- அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முதல் நிலை சரிபார்ப்பு செயல்முறை முழுவதையும் மேற்பார்வையிடும் பணியில் ஈடுபடுகிறார்கள் .
- சீரற்ற முறையில் தெரிவுசெய்யப்பட்ட 5 விழுக்காடு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளில் உயர்நிலை மாதிரி வாக்குப்பதிவு நடத்தப்படுகிறது. (அதாவது 1 விழுக்காடு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் 1200 வாக்குகள், 2 விழுக்காடு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் 1000 வாக்குகள் மற்றும் 2 விழுக்காடு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் 500 வாக்குகள்). மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் முடிவுகள் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளிலுள்ள சீட்டுகளின் எண்ணிக்கையுடன் கணக்கிணக்கம் செய்யப்படுகிறது. அவர்கள் 5 விழுக்காடு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளை சீரற்ற முறையில் தெரிவுசெய்யவும் மாதிரி வாக்குப்பதிவு நடத்தவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.
- முதல் நிலை சரிபார்ப்பின் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட தேர்ச்சிபெற்ற மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளின் பட்டியல் அனைத்து

| | |
|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்படுகிறது.<br>• முதல் நிலை சரிபார்ப்பின் போது அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முத்திரைகள், படிவங்கள் பதிவேடு ஆகியவற்றில் கையொப்பமிட அனுமதிக்கப்படுகிறார்கள் . |
| 3 | **முதல் நிலை சரிபார்ப்புக்குப் பின்னர் பயிற்சி மற்றும் விழிப்புணர்வுக்காக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளை வெளியே எடுத்தல் .** |
| | • முதல் நிலை சரிபார்ப்பு முடிந்த பிறகு, அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் முன்னிலையில் பயிற்சி மற்றும் விழிப்புணர்வுக்காக அதிகளவாக 10 விழுக்காடு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகள் வெளியே எடுக்கப்படுகின்றன.<br>• விழிப்புணர்வு மற்றும் பயிற்சிக்காக எடுக்கப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளின் பட்டியல் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. |
| 4 | **மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளை சமவாய்ப்புக்குட்படுத்துதல்கள்** |
| | • மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினைச் சரிபார்க்கும் கருவிகள் சட்டமன்ற தொகுதி/பிரிவு வாரியாக ஒதுக்கீடு செய்யப்படுவதற்கு அங்கீகாரம் பெற்ற தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகள் முதல் சமவாய்ப்புக்குட்படுத்தப்படுகின்றன.<br>• முதல் சமவாய்ப்புக்குட்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினைச் சரிபார்க்கும் கருவிகளின் பட்டியல் (சட்டமன்ற தொகுதி/பிரிவு வாரியாக) |


| | |
|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்படுகிறது.<br>• போட்டியிடும் வேட்பாளர் பட்டியலை இறுதி செய்த பின்னர், முதல் சமவாய்ப்புக்குட்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினைச் சரிபார்க்கும் கருவிகளின் (சட்டமன்ற தொகுதி/பிரிவு வாரியாக) பட்டியலும் போட்டியிடும் வேட்பாளருக்கு வழங்கப்படுகிறது.<br>• வாக்குச்சாவடி வாரியாக இயந்திரங்களை ஒதுக்கீடு செய்வதற்கும் இருப்பில் வைப்பதற்கும் சின்னம் பதிவேற்றம் செய்வதும், இரண்டாம் சமவாய்ப்புக்கு உட்படுத்துவதும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினைச் சரிபார்க்கும் கருவிகளை இயக்குவதற்கு முன்னர், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினைச் சரிபார்க்கும் கருவிகளின் போட்டியிடும் வேட்பாளர்கள் முன்னிலையில் நடத்தப்படுகிறது.<br>• இரண்டாவது சமவாய்ப்புக்குட்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினைச் சரிபார்க்கும் கருவிகளின் விவரங்கள் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு வழங்கப்படுகிறது. |
| 5 | **மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளில் சின்னம் ஒதுக்கீடு செய்தல் .** |
| | • வாக்குப்பதிவுக்குப் பயன்படுத்தப்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினைச் சரிபார்க்கும் கருவிகளில் சின்னம் ஒதுக்கீடு செய்வது ஆகியவை போட்டியிடும் வேட்பாளர்கள் முன்னிலையில் நடைபெறும்.<br>• மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினைச் சரிபார்க்கும் கருவிகளை மூடி முத்திரையிடப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கனைச் |

| | |
|---|---|
| | சரிபார்க்கும் கருவிகளின் மீது வேட்பாளர்கள்/அவர்களின் பிரதிநிதிகள் கையொப்பமிட அனுமதிக்கப்படுகிறார்கள்.<br>• சீரற்ற முறையில் தெரிவு செய்யப்பட்ட 5 விழுக்காடு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளில் 1000 வாக்குகள் பதிவு செய்து உயர்நிலை மாதிரி வாக்குப்பதிவு நடத்தப்படுகிறது. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் மின்னணு முடிவுகள் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளின் சீட்டுகளின் எண்ணிக்கையுடன் சரிபார்க்கப்படுகிறது. வேட்பாளர்கள்/அவர்களின் பிரதிநிதிகள் 5 விழுக்காடு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகள் ஆகியவற்றை சீரற்ற முறையில் தெரிவு செய்யவும் அதில் மாதிரி வாக்குப்பதிவு செய்யவும் அனுமதிக்கப்படுகிறார்கள். |
| 6 | **வாக்குப்பதிவு பணியாளர்களுடன் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வாக்குச்சாவடி பணியாளர்களுக்கு மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளை வழங்குதல் .** |
| | • போட்டியிடும் வேட்பாளர்கள் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகள் அனுப்பப்படுகின்றன . |
| 7 | **வாக்குப்பதிவு நாளன்று மாதிரி வாக்குப்பதிவு மற்றும் உண்மையான வாக்குப்பதிவு**<br>• போட்டியிடும் வேட்பாளர்களால் நியமனம் செய்யப்பட்ட வாக்குச் சாவடி முகவர்கள் முன்னிலையில் ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் வாக்குப்பதிவு நாளில் மாதிரி வாக்குப்பதிவு நடத்தப்படுகிறது. |
| | • போட்டியிடும் வேட்பாளர்களால் நியமனம் செய்யப்பட்ட வாக்குச் சாவடி முகவர்கள் வாக்குச் சாவடிகளில் இருந்து வாக்குப்பதிவு செயல்முறையைக் கண்காணிக்க அனுமதிக்கப்படுகிறார்கள். |
| | • வாக்குச்சாவடி முகவர்கள் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளில் மூடி |

<table>
<tr><td></td><td>முத்திரையிடப்படும் வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கனை சரிபார்க்கும் கருவிகளில் வாக்குச்சவாடி முகவர்கள் கையொப்பமிட அனுமதிக்கப்படுகிறார்கள்.(வாக்குப்பதிவு தொடங்குவதற்கு முன்பு மற்றும் வாக்குப்பதிவு முடிவடையும் பின்பு)</td></tr>
<tr><td>8</td><td>வாக்குப்பதிவு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினைச் சரிபார்க்கும் கருவிகளை வாக்குச்சாவடிகளிலிருந்து சேகரிப்பு மையத்திற்கு கொண்டு செல்லுதல்.</td></tr>
<tr><td></td><td><ul><li>வாக்குச் சாவடியிலிருந்து சேகரிப்பு மையத்திற்கு வாக்குப்பதிவு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளை எடுத்துச் செல்லும் வாகனங்களைப் பின்தொடர வேட்பாளர்கள் / வாக்குச்சாவடி முகவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.</li></ul></td></tr>
<tr><td>9</td><td>வாக்குப்பதிவு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகளை பாதுகாத்து வைத்தல் .</td></tr>
<tr><td></td><td><ul><li>வாக்குப்பதிவு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினைச் சரிபார்க்கும் கருவிகள் வேட்பாளர்கள்/அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் பாதுகாப்பு அறையில் வைக்கப்படும்.</li><li>வேட்பாளர்கள்/அவர்களின் பிரதிநிதிகள் பாதுகாப்பு அறையின் பூட்டுகளில் முத்திரைகளை இடுவதற்கு அவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் .</li><li>வாக்குப்பதிவு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினைச் சரிபார்க்கும் கருவிகள் பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டிருப்பதையும் அதன் பாதுகாப்பையும் கண்காணிக்கவும் வேட்பாளர்கள்/அவர்களின் பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுகிறார்கள் .</li></ul></td></tr>
<tr><td>10</td><td>வாக்கு எண்ணும் நாள்</td></tr>
</table>

| | |
|---|---|
| | • வாக்கு எண்ணிக்கை நாட்களில் வேட்பாளர்கள்/அவர்களின் பிரதிநிதிகள், தேர்தல் நடத்தும் அலுவலர், இந்திய தேர்தல் ஆணையத்தின் பார்வையாளர் ஆகியோர் முன்னிலையில் வாக்குப்பதிவு பாதுகாப்பு அறையானது திறக்கப்படுகிறது. |
| | • வேட்பாளர்கள் மற்றும் அவர்களால் நியமிக்கப்பட்ட வாக்கு எண்ணிக்கை முகவர்கள் முன்னிலையில் பதிவான வாக்குகள் எண்ணப்படுகின்றன. |

**மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவியைப் பயன்படுத்தி உங்கள் வாக்குகளை பதிவு செய்வது எப்படி ?**



உங்கள் வாக்கினை பதிவு செய்தல்
மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும்
வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதிசெய்யும் கருவி மூலமாக
1
வாக்குச்சாவடிக்குள் நுழையவும்
Ready
Ballot Unit
SUBRAMANYA
MALAVIKA KAPOOR
நீங்கள் வாக்களிக்கும்
பகுதிக்குள் நுழையும் போது
தலைமை வாக்குச்சாவடி அலுவலர்
வாக்கு பதிவு கருவியினை
பதிவுக்கு தயார் நிலையில் வைப்பார்
Ready
NAME
2
உங்கள் வாக்கினை அளிக்கவும்
Ballot Unit
SUBRAMANYA
MALAVIKA KAPOOR
வாக்குப் பதிவு கருவியில் உள்ள
உங்கள் விருப்ப வேட்பாளரின்
பெயர் / சின்னத்திற்கு எதிரே
உள்ள நீலநிற பொத்தானை
அழுத்தவும்.
3
விளக்கினை பார்க்கவும்
Ballot Unit
SUBRAMANYA
MALAVIKA KAPOOR
நீங்கள் தேர்வு செய்த
வேட்பாளரின்
பெயர் / சின்னம்,
எதிரே சிவப்பு நிற
விளக்கு ஒளிரும்.
4
ஒப்புகைச் சீட்டினை பார்க்கவும்
VVPAT
நீங்கள் தேர்வு செய்து வாக்களித்த
வேட்பாளரின் பெயர் மற்றும் சின்னம்,
வரிசை எண் உள்ளடக்கிய வாக்குப் பதிவு
அலகின் இரசீதினை அச்சுபொறி அச்சிடும்
அச்சுப் பொறியில் வரும் ரசீதை
இந்த கண்ணாடி வழியாக பார்க்கலாம்,
ரசீது உங்களுக்கு தரப்படமாட்டாது
VVPAT
இந்த வாக்குப் பதிவு ரசீதினை ஏழு நொடிகள்
வரை பார்க்க இயலும். பின்னர்
அது துண்டிக்கப்பட்டு அச்சுப் பொறியின்
கீழ்ப்பகுதியில் உள்ள பெட்டியில் விழுந்து விடும்.
மேலும், சத்தமான பீப் ஒலி கேட்கும்.
கவனிக்க
வாக்குப்பதிவு இரசீதினை பார்க்கவில்லை
என்றாலோ, சத்தமான பீப் ஒலிகேட்கவில்லை
என்றாலோ தலைமை வாக்குச்சாவடி
அலுவலரை அணுகவும்.
இந்திய தேர்தல் ஆணையம்
தலைமை தேர்தல் அதிகாரி, தமிழ்நாடு
www.elections.tn.gov.in / call 1950
www.eci.gov.in

1. வாக்குச்சாவடிக்குள் நுழையவும்.

நீங்கள் வாக்குப்பதிவு செய்யும் பகுதிக்குள் செல்லும் போது, வாக்குச்சாவடி தலைமை அலுவலர் வாக்குப்பதிவு இயந்திரத்தை இயக்குவார்.

2. உங்கள் வாக்கினை பதிவு செய்யவும் .

   வாக்குப்பதிவு இயந்திரத்தில் நீங்கள் விரும்பும் வேட்பாளரின் பெயர்/சின்னத்திற்கு நேராகவுள்ள நீல நிற பொத்தானை அழுத்தவும்.

3. ஒளியைக் காண்க

   தெரிவுசெய்ய வேட்பாளரின் பெயர் / சின்னத்திற்கு நேராகவுள்ள சிவப்பு விளக்கு ஒளிரும்.

4. அச்சு நகலைக் காண்க

   காட்சிப்படுத்தப்பட்டுள்ளவாறு தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளரின் வரிசை எண், பெயர் மற்றும் சின்னம் அடங்கிய ஒரு வாக்குச் சீட்டை அச்சுப்பொறி அச்சிடும்.

   சீட்டை 7 வினாடிகள் வரை காணலாம்.

   அச்சுப் பிரதி உங்களுக்கு வழங்கப்படாது என்பதால், கண்ணாடி வழியாக அச்சு நகலைப் பார்க்கவும்.

   குறிப்பு

   உங்களுக்கு வாக்குச் சீட்டு தெரியாமலும், பலத்த பீப் ஒலியைக் கேட்காமலும் இருந்தால், வாaக்குச்சாவடி தலைமை அலுவலரைத் தொடர்பு கொள்ளவும்.